<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No. 36/2024</u>

**<u>நாள் : 26.02.2026</u>**

**எ.ம.சா.** 1 பூபதி

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் டிப்ளமோ E.E.E முடித்துள்ளேன். நான் தனலட்சுமி டிராவல்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். அது பெரியகோணாப்பட்டில் உள்ளது. அத்துடன் நான் டிரைவராகவும் பணியாற்றி வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் வழக்கறிஞருக்கு சொன்னதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் எதிருரையில் கண்டுள்ள விவரங்களும் என்னால் தெரிவிக்கப்பட்டவை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வாகன விபத்து சம்பந்தமாக நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. TN 23 BL 6229 என்ற வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்தில் மனுதாரருக்கு காயம்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் புதுப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் பர்கூர் PSV தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். விபத்து நடந்ததற்கு பின்னிட்டு நான் எனது வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். விபத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டதால் நேரடியாக மருத்துவமனைக்கு போனேன். நானும் புதுப்பேட்டை மருத்துவமனைக்குதான் போனேன். புதுப்பேட்டை மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் அன்னசாகரம் பஸ்டாப்புக்கு கீழே பள்ளத்தில் நடந்தது. அந்த ரோடு U turn சாலையாகும். விபத்து நடந்த இடத்திற்கு அருகில்தான் U turn இருந்தது. விபத்து நடந்த நேரம் இரவு 8 மணி என்றால் சரிதான். அந்த நேரத்தில் வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு வெளிச்சம் இல்லாததால்தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் இருட்டாக இருந்ததால் விபத்தை நேரடியாக பார்த்தவர்கள்

பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு பக்கத்தில் வீடுகள் இல்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்திற்கும், எதிருரையில் சொல்லியுள்ள விவரத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மனுதாரர் எனக்கு முன்னால் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டிய விதத்தை பார்த்துதான் மதுபோதையில் இருந்ததாக நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். மற்றபடி மனுதாரர் மதுபோதையில் இருந்தாரா என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மனுதாரர் மதுபோதையில் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுப்பதிலிருந்து தப்பிக்கவேண்டி உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.